நியமனத்தாள்கள் 30—3—1971, செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1971 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 3—4—1971 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) 1970-71 ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை—அளித்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்றத் தலைவர் அவர்களே! 1970-71-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். இத்துடன் மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 56.19 கோடியாகும். இதில் ரூ. 32.69 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் பட்டதாகும். எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சார்ந்ததாகும்.

இம்மன்றத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளுக்கான தொகை சற்றே பெரும் அளவினதாக உள்ளது என்பதில் ஐயமில்லை. கடந்த ஜனவரித் திங்களில் சட்ட மன்றப் பேரவை கலைக்கப்பட்ட காரணத்தால், ஒவ்வோர் ஆண்டும் அத்திங்களில் இயல்பாகச் சட்ட மன்றத்தின்முன் வைக்கப்படும் இரண்டாவது துணை மதிப்பீடுகளை இந்த ஆண்டு வைக்க ஏலாமல் போய்விட்டது. 1970 ஆகஸ்ட் திங்களில் நிறைவேற்றப்பட்ட முதல் துணை மதிப்பீடுகளுக்குப் பின்னர் ஒப்பு அளிக்கப்பட்ட புதுத் திட்டங்களுக்கான செலவையும், பல்வேறு துறைகளுக்கு தற்போதைய நிலவரப்படி பற்பல தலைப்புகளின்கீழ் தேவைப்படுகின்ற கூடுதல் நிதி ஒதுக்கங்களின் அளவையும் இத்துணை மதிப்பீடுகள் எதிரொலிக்கின்றன. மானியக் கோரிக்கைகள் அனைத்தையும் விளக்கும் விவர அறிக்கை ஒன்று மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் முன்பு வைக்கப்பட்டிருப்பதால், தற்போது வேண்டப்படும் பல்வேறு நிதி ஒதுக்கங்கள் பற்றிய முழு விவரங்களையும் விரிவாக எடுத்தியம்ப வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான சில இனங்களைப் பற்றி மட்டும் இம்மன்றத்தின் நாட்டத்தை ஈர்க்க விழைகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் 7-வது மானியத்தின் கீழ் ரூ. 140 லட்சம் கேட்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது அண்மையில் நடந்த இடைக்காலத் தேர்தல்கள் குறித்த செலவினங்களை ஒட்டியதாகும். 1970-71-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை வகுக்கும் வேளையில் இச் செலவு எதிர்பார்க்கப்படவில்லை.

1971 மார்ச் 26] [திரு. மு. கருணாநிதி]

இரண்டாவது ஊதிய ஆணைக்குழுவின் பரிவுரைகளுக்கு இணங்க அரசு வழங்கிய, அரசு அலுவலர்களுக்கான ஊதிய வீதங்கள், ஆசிரியர்களுக்கு அளித்த அதிகப்படியான ஊதியம், கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட கூடுதல்படிகள் ஆகியவை கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுவதற்கான மற்றொரு காரணமாகும். இந்நடவடிக்கைகளின் விளைவால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 22 கோடி கூடுதலாகச் செலவாகும் என மதிப்பிடப் படுகிறது. இவற்றிற்கான செலவு இந்த ஆண்டில் அந்தந்த வரவு-செலவுத் தலைப்பின் கீழ் சரிக்கட்டப்படும். இருப்பினும், 33-வது மானியத்தின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் வேண்டுவதன் மூலம் இந்நடவடிக்கைகளுக்கான ஒப்புதல் வேண்டப்படுகிறது.

சென்னை போன்ற, வளர்ந்துவரும் ஒரு மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து, சட்டம், ஒழுங்கு குறித்து பிரச்சனைகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். காவற்படையினரின் பெருகிவரும் பணிச் சுமையை ஈடுகட்டும் வகையில், கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும், வண்டிகள் வாங்கவும் ஒப்பு அளிப்பு வழங்கப்பட்டதற்கு சட்ட மன்றத்தின் ஒப்புதல் 12-வது மானியத்தின்கீழ் வேண்டப்படுகிறது.

வேளாண்மைத் துறைக்காக நடப்பு ஆண்டில் அதிக அளவு இடைக்கால ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் அரசு காட்டி வரும் இடையறா ஊக்கத்திற்கு இது நல்லதொரு சான்றாகும். இம் மாநிலத்தில் பருப்பு வகைகளின் விளைச்சலைப் பெருக்கு வதற்காக ஒரு சிறப்புத் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. மாநில அரசு புன்செய் சாகுபடி முறைகளைச் சீர்படுத்துவது குறித்து கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக ஒருங்கிணைந்த புன்செய் நிலப் பண்ணைத் திட்டம் ஒன்று கோயில்பட்டியில் தொடங்கப்பட்டுள்ளது. விசைத் துளைக் கருவிகளும் (Power drills), பல்சக்கர இயந்திரக் கலப்பைகளும் (Crawler tractor) அளவில் வாங்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறை வலுப்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டங்களுக்காக இம் மன்றத்தின் ஒப்புதல் 16-வது மானியத்தின்கீழ்க் கேட்கப்பட்டுள்ளது.

உரங்கள் வாங்கும் வண்ணம் உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன் வழங்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ 300 லட்சம், இப்போது ரூ. 536 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அதிகரித்துள்ள நிதி ஒதுக்கம் 47-வது மானியத்தின்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது. வேளாண்மை வளர்ச்சிக்கும், வளத்திற்கும் ரூ. 72 கோடி மதிப்புள்ள திட்டம் பற்றிய அறிக்கை ஒன்று வகுக்கப்பட்டு, வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்திடம் அளிக்கப்பட்டிருப்பதை உறுப்பினர்கள் அறிவர். இத்தகைய பெருந்திட்டத்தை, செம்மையாகவும் திறமையாகவும் செயல்படுத்த வேண்டி இம் மாநிலத்தின் நிர்வாக

ஆய அமைப்பைத் (Administrative hierarchy) தக்க முறையில் விரிவுபடுத்தி வலுப்படுத்த வேண்டி வந்தது. இக் காரியத்துக்காக நியமிக்கப்பட்ட கூடுதல் பணியாளர் பொருட்டு ஏற்பட்ட செலவு 19-வது மானியக் கோரிக்கையின்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குப் பெருமளவில் தேவைப்படும் கடன் வசதிகள் எளிதான வழியில் கிடைக்கும் பொருட்டு தொடக்க நிலவள வங்கிகளின் எண்ணிக்கையையும் பெருக்கவேண்டியிருந்தது. இதனையொட்டி, 117 புதிய நிலவள வங்கிகள் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. இத் தொடக்க நிலவள வங்கிகளில் பங்கு முதலீடு செய்வதற்காக அரசுக்கு ஏற்பட்ட செலவு 40-வது மானியக் கோரிக்கையில் அடங்கியுள்ளது. வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்காக நிலவள வங்கிகளால் வெளியிடப்பட்ட சிறப்புக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களுக்கென்று மாநில அரசு உதவித்தொகை அளித்ததன் காரணமாக ஏற்பட்ட செலவினம் குறித்தும் இம் மானியத்தின்கீழ் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கு இம் மாநிலத்தில் உள்ள பாசன வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் ராமநதி, கடானா திட்டங்கள் செவ்வனே நடந்தேறி வருகின்றன. தற்போதைய செலவுப் போக்கினைக் கருத்தில் கொண்டு, இந் திட்டங்களுக்கான கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கு ஒப்புதல் கேட்கப் படுகிறது. சிறுபாசன சிறப்புத் திட்டப் பணிகளுக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 200 லட்சம், நடப்பு ஆண்டில் ரூ 300 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பாசன அமைப்புகள், கால்வாய்கள் ஆகியவற்றைப் பேணிக் காத்து வருவதற்காக கூடுதலாக ரூ. 2 கோடி செலவு ஏற்பட்டுள்ளது. இக்கூடுதல் நிதி ஒதுக்கங்களுக்காக சட்ட மன்றத்தின் ஒப்புதல் 26, 41-வது மானியக் கோரிக்கைகளின்கீழ் வேண்டப் பட்டுள்ளது.

புதிய தொழில்கள் தழைப்பதற்கு அரசு தொடர்ந்து ஊக்க மளித்து வருகிறது. இத் துறையில், தொழில் முனைவர்களுக்கு உதவி அளிப்பதற்காக தனித்தியங்கும் அரசு நிறுவனங்கள் (Autonomous Corporations) சில ஏற்படுத்தப்பட்டிருப்பதை இம்மன்றம் அறியும். இந்நிறுவனங்களுக்குத் தேவையான பங்கு மூலதனத்தையும் வழிவகை முன் பணங்களையும் அரசு, அவ்வப்போது வழங்குகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றில் அரசு பங்கு மூலதன முதலீடு செய்தது குறித்த நிதி ஒதுக்கம் இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு, இக் கழகங்களின் மூலம் தொழில்களுக்கு உதவிபுரிவதுடன், மூடப்பட்ட சில தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கும் ஆவன செய்து

வருகிறது. இவ்வகையில், சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் (Southern Structurals) என்ற நிறுவனத்திற்கு உதவி வழங்கப்பட்டதை ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன்குறித்து 47-வது மானியத்தின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்திற்கு இம்மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

பயிற்சி பெற்றும், பணி கிட்டாத ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துவதற்காக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ள சிறப்புத் திட்டத்தை இம்மன்றம் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. தொழில்—பயில் ஆசிரியர்களுக்கான ((Apprentice Teachers) இத் திட்டத்திற்காக ஒரு முழு ஆண்டில் ரூ. 98 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டிற்காகத் தேவைப்படும் தொகை, 13-வது மானியக் கோரிக்கையின்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ. 271 லட்சம் செலவில் 8,500 குழாய்க் கிணறுகளை வாந்தி-பேதியால் பீடிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைப்பதற்கான பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. இதற்காகச் சட்டமன்றத்தின் ஒப்புதல் 15-வது மானியத்தின்கீழ் வேண்டப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் பல்வேறு மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் மாவட்டத் தலைமை இடங்களில் உள்ள மருத்துவமனைகள் சிலவற்றில் பல் மருத்துவப் பிரிவுகள் ((Dental Clinics)) தொடங்கப்பட்டு அம் மருத்துவ மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சென்னை, அரசு பொது மருத்துவ மனையில் இதயக் காப்புப் பிரிவு ((Coronary Care Unit)) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இச் செலவினங்கள் அனைத்தும் குறித்த நிதி ஒதுக்கம் 14-வது மானியத்தின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

குடும்ப நலத்திட்டம் குறித்து இவ்வரசு எப்போதுமே போதிய நாட்டம் செலுத்தி வந்துள்ளது. இந் திட்டத்தை மேலும் முனைப்பாகச் செயல்படுத்துவதற்காக, நடப்பு ஆண்டில் பல வட்டாரங்களில் குடும்ப நலத்துணை நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்காக இம் மன்றத்தின் ஒப்புதல் 27, 42-வது மானியங்களின்கீழ் வேண்டப்படுகிறது.

பொதுக் கடன்களை திருப்பியளித்தல் (Repayment of Public Debt) என்னும் இனத்தின்கீழ் ரூ. 8.5 கோடி (யளவிற்கு நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற வழிவகை முன்பணங்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக இத்தொகை தேவைப்படுகிறது.

15. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பிற இனங்களுக்கு விளக்கக் குறிப்பில் வேண்டிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்று கூறி இத்துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7. 1971-72-ம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.

*திரு. என். கே. பழனிச்சாமி: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரைக்குப் பின்னுல்தான் வரவு-செலவுக் கணக்குகள் குறித்து விவாதிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஏனென்று சொன்னுல், கவர்னர் பிரசங்கம் அரசாங்கத்தினுடைய கொள்கைகள் என்ன என்பதைப்பற்றி விவரமாகத் தெரிவிப்பதாகும். வழக்கமாக அந்தக் கொள்கைகளை விவாதித்ததற்குப் பிறகுதான் வரவு-செலவுக் கணக்குகளை விவாதிப்பார்கள். ஆனல் கவர்னர் பிரசங்கத்தின்மீது விவாதம் நடப்பதற்குமுன் வரவு-செலவுத்திட்டம் விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒரு சமயம் இந்த மாதத்திற்குள்ளாக மேல் சபையிலும் இந்த வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காகவோ என்னவோ. இருந்த போதிலும் கவனர் பிரசங்கத்தை இன்னும் இரண்டு நாட்களுக்கு முன்பாக வைத்திருந்தால் சரியாக இருந்திருக்கும்.

முதன்முதலாக இந்த நாட்டு மக்கள் முற்போக்குக் கூட்டணிக்குப் பெருவாரியாக வோட்டளித்து மத்தியில் இந்திரா காந்தி அம்மையாரின் கட்சிக்குப் பெருவாரியாக வோட்டளித்து அமர்த்தியிருக்கிருர்கள். மாநிலத்திலே திரு. கருணாநிதி அவர்களுடைய கட்சிக்குப் பெருவாரியாக வோட்டளித்துத் திராவிட முன்னேற்றக் கழகம் மந்திரிசபை அமைப்பதற்கான உதவி செய்த மக்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றிகலந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தேர்தலிலே இந்தியா பூராவிலும் சோஷலிசத்திற்காக வோட்டுச் செய்திருக்கிருர்கள் என்பதை மறுக்கமுடியாது.

அது மட்டுமல்ல. இந்த நாட்டில் ஒரு முற்போக்கான இடது சாரித் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் நன்ருக எடுத்துக் காட்டியிருக்கிறது. ஏகபோக முதலாளிகளை எதிர்ப்பது, நிலப்பிரபுக்களைக் கட்டுப்படுத்துவது இப்படிப்பட்ட செய்கைகளுக்கு இன்றைய தினம் நாட்டில் ஆதரவு இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக் காட்டாக இருக்கிறது. ராஜாக்களுக்கும் நிலப்பிரபுகளுக்கும் முதலாளிகளுக்கும் ஆதரவாக இருந்த அவர்கள் கூட்டணி படுதோல்வியடைந்து உருக்குலைந்து எதிர்க்கட்சியில்கூட உட்கார முடியாத நிலைமை நாட்டில் ஏற்பட்டு இருக்கிறது. ஜனங்களுடைய மனோபாவம் எந்த அளவுக்கு இருக்கிறது, ஜனங்களுக்கு எந்த அளவுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். தேர்தல் நடப்பதற்கு முன்பு, அதாவது அதற்கு முன்னுலே நேருஜி இருந்த காலத்தில்,